வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg No.: P/1632

# ஈழநாடு
Eelanadu

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 08.06.2026 திங்கட்கிழமை இதழ் : 153 பக்கங்கள் : 08

# சுரேஷ் சாலே நேற்று இரவு அவசர சிகிச்சைப் பிரிவில்!



## உடல் நிலை மோசமானதை அடுத்து அவசரமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதி

கொழும்பு, ஜூன். 08

பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர், மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே நேற்றிரவு கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் முறையற்ற நடத்தைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன் தினம் இரவு முதல் அவர் சாகும் வரை உணவு தவிர்ப்பு போராட்டமொன்றை ஆரம்பித்திருந்த நிலையிலேயே, நேற்று இரவு அவர் அவசரமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுரேஷ் சாலேயின் உடல்நிலை கடுமையான நிலைக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக அவரது சட்டத்தரணிகள் மற்றும் குடும்பத்தினர் தொடர்ச்சியாக எச்சரித்து வந்த நிலையிலும், அவர் உணவு, நீர் மற்றும் மருந்துகளை உட்கொள்ள மறுத்து வந்த நிலையிலுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

07

# அரிசி தட்டுப்பாடு நாட்டில் ஏற்படாது!

## அமைச்சர் வசந்த சமரசிங்க திட்டவட்டம்



கொழும்பு, ஜூன். 08

எதிர்வரும் பெரும்போகம் வரை நாட்டில் எவ்வகையிலும் அரிசி தட்டுப்பாடு ஏற்படாது என வர்த்தக, வாணிப மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் சுமார் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் மெட்ரிக் தொன் சிவப்பு மற்றும் வெள்ளை அரிசி கையிருப்பில் உள்ளதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன், தேவையான அளவு மாற்று அரிசி இருப்புகளை பேண இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

03

# இடைநிறுத்தப்பட்டிருந்த 25 பாரிய சுகாதாரத் திட்டங்கள் மீள ஆரம்பம்

## 76,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, ஜூன். 08

கடந்த கால ஆட்சியாளர்களால் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்ட சுகாதாரத் துறைக்கான 25 பாரிய கட்டுமானப் பணிகளை மீள ஆரம்பித்து அவற்றை நிறைவு செய்வதற்காகச் சுமார் 76,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டு மக்களுக்குத் தரமான சுகாதாரச் சேவையை வழங்கும் நோக்கில், சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸவின்

07

# 15 சதவீதமான பெண்கள் உடல் பருமனால் பாதிப்பு

## சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு, ஜூன். 08

நாட்டிலுள்ள பெண்களில் 15 சதவீதமானோர் உடல் பருமன் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ளமை சர்வதேச ரீதியில் நடத்தப்பட்ட புதிய ஆய்வு ஒன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாகச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தேசிய ஊட்டச்சத்து மாதத்தை முன்னிட்டு கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரை யாற்றிய சுகாதார அமைச்சின் செயலாளர், விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் அனில் ஜாசிங்க இந்த விவரங்களை வெளியிட்டுள்ளார்.

(அ)

# கலைஞரான சங்கீர்த்தனனை உடனே விடுவிக்கவேண்டும்!

## ஜனாதிபதிக்கு சிறிதரன் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன். 08

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கலைஞரான கணேஸ்குமார் சங்கீர்த்தனை விடுவிப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள உதயநகர் மேற்கு.

07

# சானி அபேசேகரவின் சித்திரவதையால் மாவீரன் சாலேயை இழக்கமாட்டோம்!

## விமல் வீரவன்ஸ கூறுகிறார்

கொழும்பு, ஜூன். 08

நந்திக்கடல் வெறுப்பை உமிழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழ்ச்செல்வனின் தலைக்கு மேல் இருந்த புலனாய்வுத் தகவல்களின் உரிமையாளரிடம் பழிவாங்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சானி அபேசேகரவின் சித்திரவதையில் மாவீரன் இறக்க நாங்கள் அனுமதிக்கமாட்டோம். நந்திக்கடல் வெறுப்பு இவ்வாறு நிரப்பப்படுவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். சுரேஸ் சாலேயுக்காக குரல் கொடுப்போம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.



பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலே தொடர்பில் தனது

07

# அரச அதிகாரிகளின் வெளிநாட்டு பயணங்களுக்கு அரசு முற்றுப்புள்ளி

## புதிய கட்டுப்பாடுகள் விதிப்பு

கொழும்பு, ஜூன். 08

அரச அதிகாரிகள் தொடர்ச்சியாக வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்வதை கட்டுப்படுத்தும் வகையில் புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கையின் முன்னணி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த ஊடகத்தில் நேற்று வெளியிடப்பட்டுள்ள விசேட செய்தியின் படி, அமைச்சின் ஊடாக அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இந்த அவசர அறிவுறுத்தல் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் சந்தன அபேரத்னவினால் அனைத்து அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மிகவும் அத்தியாவசியமான

03

# புதிய உயர்கல்வி கொள்கை வரைவு; மக்கள் கருத்து சமர்ப்பிக்க அழைப்பு

கொழும்பு, ஜூன். 08

முன்மொழியப்பட்டுள்ள புதிய உயர்கல்வி கொள்கை தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, பொதுமக்கள் தங்களது கருத்துக்களை இணையத்தளம் ஊடாக சமர்ப்பிப்பதற்கான கேள்விக் கொத்து ஒன்று அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் புதிய உயர்கல்வி கொள்கையை உருவாக்கும் முதற்கட்டமாக, கல்வித்துறை சார்ந்த பல்வேறு தரப்பினரிடமிருந்துஏற்கனவே கருத்துக்கள்

07

# சூரிய மின்சக்தி புறக்கணிக்கப்பு

## டீசல் மின்னுற்பத்திக்கு முன்னுரிமை

கொழும்பு, ஜூன். 08

இலங்கையில் சூரிய ஒளி தாராளமாகக் கிடைக்கும் காலப்பகுதிகளிலும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தாமல் டீசல் மின்னுற்பத்திக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாக முன்னணி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த செய்தியின்படி, உள்நாட்டு ரூபாயில் மட்டுமே கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படும் சூரிய மின்சக்தி உற்பத்தியாளர்களுக்கு முன்னர் ஒரு அலகு மின்சாரத்திற்கு 15 ரூபா முதல் 37 ரூபா வரை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதாக

03

# தமிழ்ப் பாடகரின் கைது எங்களுக்கு மனவேதனை

## இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன். 08

தோல்வியடைந்த சில அரசியல்வாதிகளுக்கு, இன்றைய அரசியல் சூழலில் ஒரு இளம் பாடகர் கைது செய்யப்பட்டிருப்பது பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் எமக்கு அது மகிழ்ச்சியல்ல மனவேதனை என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், கைது செய்யப்பட்ட பின்னரே அந்த இளம்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதான பாடகரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## தேசிய மக்கள் சக்தி எம்.பிக்களிடம் டக்ளஸ் தேவானந்தா அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன். 08

தவறான அல்லது சுயலாப அரசியல் வழிநடத்தல்களுக்கு எமது இம் சமூதாயத்தின் ஒரு பகுதியினர் எடுபட்டு உணர்வு பூர்வமான சிலவற்றை தவறாகப் புரிந்து கொண்டு சொலலவோ, எழுதவோ அல்லது பாடவோ முற்படுவதை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் உள்ளாக்கமுடியாது என முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நான் ஆட்சியில் இருந்த காலத்தில் பிரபாகரனின் படத்தின் மீது இருந்து ஈர்ப்பின் காரணமாக அவர்கள் சார் நிகழ்வொன்றில் ஓர் இளைஞன் பிரபாகரனது படம் பொறிக்கப்பட்ட ரீ-சேர்ட் ஒன்றை அணிந்து நடனமாடியிருக்கின்றார்.

இந்த விடயத்தை அறிந்த பொலிஸார் அவரை கைது செய்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முற்பட்டனர்.

இந்த விடயம் தொடர்பாக அந்த இளைஞனின் தாயார் என்னிடம் வந்து நிலைமையைக் கூறி தனது கவலையை வெளிப்படுத்தியிருந்த நிலையில் நான் பொலிஸாரிடம் தொடர்பு கொண்டு தயவு செய்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவ்விடயத்தை கொண்டு செல்லாது சாதாரண சட்டங்களின் கீழ் அவ்விடயத்தை பார்க்கவேண்டும் என்று எடுத்துரைத்ததுடன் அந்த இளைஞர் தவறான வழி நடத்தலால் தான் அவ்வாறு மேற்கொண்டுவிட்டார் என்பதையும் சுட்டிக்காட்டி அவருக்கு பொது மன்னிப்பு கொடுத்து விடுவிக்குமாறு கோரியிருந்தேன்.

எனது கருத்தை ஏற்று குறித்த இளைஞரை பொலிஸார் விடுவித்திருந்தனர்.

இதேவேளை, இன்றைய ஆட்சியாளர்கள் கூட வடக்கில் தேர்தல் காலங்களில் மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்காக தமது தேர்தல் மேடைகளில் இவ்வாறான பாடல்களை ஒலி பரப்பிய அல்லது பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்னெடுத்ததாக பல பதிவுகள் இருக்கின்றன.

இந்த நிலையில் தற்போது யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தின் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் பொலிஸாருடன் பேசி அந்த இளைஞனை விடுவிக்கக்கூடிய ஆற்றல் இருக்கின்றதோ அல்லது எமது மக்கள் மீதான அவர்களுக்கு உணர்வு இருக்கின்றதோ என பார்க்கவேண்டும் எமது மக்கள் அளித்த வாக்கின் பிரகாரம் பாராளுமன்றில் இருப்பதால் இவ்விடயத்தை தமது தலைமையிடம் எடுத்துச் சொல்லி குறித்த இளைஞனை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கொண்டு செல்லாது விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.

(அ)

# எரிபொருள் விலை உயர்வினால் பஸ் சேவைகள் 50 வீதம் குறைப்பு

கொழும்பு, ஜூன். 08

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் விலை உயர்வு காரணமாக, தனியார் பேருந்து சேவைகளை 50 வீதம் வரை குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நுகேகொடையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

நட்டத்துடன் பஸ்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், கால அட்டவணைகளை மாற்றி சேவைகளை மட்டுப்படுத்த முடிவு செய்துள்ளதாக கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டார்.

மேலும், வருடாந்த பஸ் கட்டண திருத்தம் தொடர்பில் இதுவரை அரசாங்கத்திடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை எனக் குறிப்பிட்ட அவர், நிலைமை தொடர்ந்தால் பேருந்து கட்டணங்கள் 20 வீதம் முதல் 25 வீதம் வரை அதிகரிக்கக்கூடும் என்றும் எச்சரித்துள்ளார்.

(அ)

# கார் மோதி இரு பெண்கள் பலி!

கொழும்பு, ஜூன். 08

ஹங்வெல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எம்புல்கம - பனாகொட வீதியில் நேற்று முன் தினம் மாலை இடம் பெற்ற கார் விபத்தில் இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

வீதியின் ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்தவர்கள் மீது எம்புல்கம நோக்கி பயணித்த கார் ஒன்று மோதியுள்ளது.

விபத்தை ஏற்படுத்திய கார் நிறுத்தப்படாமல் தப்பிச் சென்ற நிலையில், காயமடைந்த பெண்கள் இருவரும் நவகமுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் ரனால மற்றும் கிராந்துருகோட்டே பகுதிகளைச் சேர்ந்த 42 மற்றும் 44 வயதுடைய பெண்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். விபத்தின் போது ஓட்டுநர் மது அருந்தியிருந்தமை விசாரணையில் உறுதியாகியுள்ளது.

(அ)

# மாகாண சபைத் தேர்தல் ஜனநாயக உரிமை சட்டமூலங்கள் மீது பழி சுமத்தி நழுவாதீர்கள்!

## அரசை வலியுறுத்துகிறது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஜூன். 08

மாகாண சபைத் தேர்தலென்பது மக்களின் ஜனநாயக உரிமையாகும். எனவே, சட்டமூலங்கள் மீது பழிவை சுமத்திவிட்டு அரசாங்கம் நழுவக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான நவீன் திஸாநாயக்க கூறியவை வருமாறு-

"மாகாணசபைத் தேர்தல் தற்போது நடத்தப்பட வேண்டும். அதனை செய்யுமாறு அரசாங்கத்தை நாம் வலியுறுத்துகின்றோம்.

எனினும், சட்டம்மீது பழியை சுமத்திவிட்டு தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. இதனை ஏற்க முடியாது.

ஏனெனில் தேர்தலென்பது மக்களின் ஜனநாயக உரிமையாகும். அந்த உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணைந்தே மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்ள எதிர்பார்க்கின்றன. கண்டி மாவட்டத்தில் ஒன்றாகவே களமிறங்குவோம்-என்றார் நவீன் திஸாநாயக்க. (அ)

# ஹொரணை வங்கியில் பணம் மோசடி உதவி முகாமையாளரிடம் விசாரணை

கொழும்பு, ஜூன். 08

ஹொரணை பகுதியில் உள்ள அரச வங்கியில் இருந்து ரூ.35 மில்லியன் காணாமல் போன சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட உதவி முகாமையாளர் மேலதிக விசாரணைகளுக்காக நேற்று வங்கிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் அவரை 6 நாள்கள் காவலில் வைத்து விசாரிக்க ஹொரணை நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. இதேவேளை, கைதுசெய்யப்பட்ட பாதுகாப்பு அதிகாரி எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜூன் 3ஆம் திகதி பல ஏ.ரி.எம் இயந்திரங்களில் வைப்புச் செய்வதற்காக எடுத்துச் செல்லப்பட்ட ரூ.35 மில்லியன் பணம் திருடப்பட்டதாக ஹொரணை பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்தது. தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், வங்கியின் பாதுகாப்புப் பெட்டகத்திலிருந்து பணம் எடுக்கப்பட்டமை சி.சி.ரி.வி காட்சிகளில் உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும் வங்கி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது, கழிவுப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த கொள்கலனிலிருந்து ரூ.17 இலட்சத்து 40 ஆயிரம் பணம் மீட்கப்பட்டது.

விசாரணைகளின் அடிப்படையில், உதவி முகாமையாளரும் பாதுகாப்பு ஊழியரும் இணைந்து பணத்தை அபகரிக்கத் திட்டமிட்டிருந்தமை தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ)

# பாடல்கள் ஊடாக தமிழரின் வலிகளை உணர்வுகளை சொல்வது குற்றமில்லை!

யாழ்ப்பாணம், ஜூன். 08

இனங்களுக்கு இடையில் குரோதங்களை ஏற்படுத்துவதே குற்றமாகும். பாடல்கள் ஊடாக தமிழ் மக்களின் வலிகளை , உணர்வுகளை சொல்வது குற்றமில்லை.

ஆனால் அவ்வாறு பாடியவர் இன்று சிறைக்கம்பிகளின் பின்னால் உள்ளார். அவரை விடுதலை செய்ய வேண்டும் என சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

குவியம் நிறுவனத்தால் நடத்தப்பட்ட இலங்கை தமிழ் திரைப்பட கலைஞர்களுக்கு இடையிலான துடுப்பாட்ட சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. அதில் விருந்தினராக கலந்து கொண்டு கலைஞர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் உங்களுடன் ஒருவராக போட்டியாளராக இருக்க வேண்டியவர் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தமிழ் மக்களின் வலிகளை, உணர்வுகளை இசைப்பாடல்கள் ஊடாக வெளிக்கொணர வேண்டும் என ஆவாவுடன் இருந்த ஒரு இளைஞன் இன்று சிறை கதவுகளின் பின்னால், சிறையில் வாடுகின்றார்.

பயங்கரவாத தடைச் சட்டம் ஒரு பயங்கரமான சட்டம். உலகின் மனச்சாட்சியையே உலுக்கும் சட்டம். அந்த சட்டத்தின் கீழ் உங்களின் சக கலைஞன் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பாடல்களை பாடுவது பயங்கரவாதம் இல்லை. நாம் பேசுகின்றன வெளிப்படுத்துகின்ற விடயங்கள் இனங்களுக்கு இடையில் குரோதத்தை ஏற்படுத்துமாக இருந்தால் அது குற்றம்.

இந்த நாட்டிலே எது பயங்கரவாதம் என்பதனை பொலிஸார் தான் தீர்மானிக்கும் நிலைமை காணப்படுகிறது. இந்த வரி, இந்த வார்த்தை இனங்களுக்கு இடையில் குரோதத்தை ஏற்படுத்துகிறது. என்பதனை பொலிஸார் தீர்மானித்து , கைது செய்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றில் முற்படுத்துகின்றனர்.

இந்த பயங்கரவாத தடைச் சட்டம் நீதிமன்றங்களையும் கட்டி வைத்துள்ளன பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஒருவரை பொலிஸார் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினால், அவரை பிணையில் விடுவிக்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்றுக்கு இல்லை.

இவ்வாறான பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவோம் என்றே ஜே.வி.பியினர் ஆட்சிக்கு வந்தனர்.

ஆனால் அவர்களும் இந்தச் சட்டத்தை நீக்கவில்லை. பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டதே ஜே.வி.பியினரை அடக்கவே. அந்தச் சட்டத்தி னால் அவர்களும் பாதிக்கப்பட்டவர்கள்.

ஆகை யால் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும்.

சாதாரண சட்டத்தின் கீழ் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளுக்குக்கூட பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை தற்போது எடுக்கப்படுகிறது-என்றார்.

(அ)

# வடக்கு கரையோரத்தில் பலத்த காற்று!

கொழும்பு, ஜூன். 08

காங்கேசன்துறை முதல் மன்னார் வழியாக கற்பிட்டி வரையிலான கடலோரப் பகுதிகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 60-70 கி.மீ. வரை அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மறு அறிவிப்பு வரும் வரை அப்பகுதிக்குச் செல்ல வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු
08.06.2026 திங்கட்கிழமை
பராபவ வருடம், வைகாசி 25

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# ஹிப்ஹொப் சங்கீ விவகாரம்

“ஹிப்ஹொப் சங்கீ” என்று அறியப்படும் 24 வயதுடைய சந்த இசைக் கலைஞரான சங்கீதாசன் கணேஷ்குமார் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட சம்பவம் தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் கடுமையான கண்டனத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஹிப்ஹொப் சங்கீ தென்மராட்சி சாவகச்சேரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலைநிகழ்ச்சி நடத்தியதை தொடர்ந்தே சில தினங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டார். அவரைத் தடுப்புக்காவலில் வைப்பதற்கு பயங்கலவாத தடைச்சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தியமை கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் தெரிந்தெடுத்த முறையில் நீதிமுறைமை பிரயோகிக்கப்படுகின்றமை தொடர்பில் வாதப் பிரதிவாதங்களை மூளவைத்திருக்கிறது.

ஹிப்ஹொப் சங்கீயின் பாடல்வரிகள் விடுதலை புலிகளை புகழும் வகையில் அமைந்திருந்ததாகவும் இனங்களுக்கு இடையில் குரோதத்தைத் தூண்டும் ஆபத்தைக் கொண்டிருப்பதாகவும் குற்றஞ்சாட்டியே அதிகாரிகள் அவரைக் கைதுசெய்தார்கள்.

அரசாங்கம் சங்கீயின் பாடலுக்கு அளவுக்கு அதிகமான எதிர்வினையை வெளிக்காட்டாமல் இருந்திருந்தால், அது பெரும்பாலும் பொதுவெளியில் கவனத்துக்கு வராமல் போயிருக்கும் என்றும் ஒரு சாதாரண விசாரணையை நடத்தி எச்சரிக்கையைச் செய்து சங்கீயை அனுப்புவதற்கு பதிலாக, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவரைக் கைது செய்ததன் மூலம் இந்த விவகாரத்தை அரசாங்கம் தேவையின்றி பெரிதாக்கியிருப்பதுடன் கடந்த காலப் போராட்டங்களை நினைவு கூருவதையே பிரதான அரசியல் செயற்பாடாக முன்னெடுத்துவரும் தமிழ் அரசியல் சக்திகளுக்கும் புலம்பெயர் தமிழச் சமூகத்தின் மத்தியில் உள்ள தீவிரவாத நிலைப்பாட்டைக் கொண்ட சக்திகளுக்கும் உத்வேகத்தைக் கொடுத்திருக்கிறது.

ஹிப்ஹொப் சங்கீயை சட்டரீதியாகப் பாதுகாக்கும் பொறுப்பை இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் ஏற்றுக் கொண்டிருக்கிறார். தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக இருந்த போது பயங்கரவாத தடைச்சட்டத்தை கொடிய சட்டம் என்று கடுமையாக எதிர்த்துவிட்டு, ஆட்சியதிகாரத்துக்கு வந்த பிறகு அதே சட்டத்தை பயன்படுத்துவதை சுமந்திரன் சாடியிருக்கிறார்.

கலை வெளிப்பாடுகளுக்கு எதிராக அவசரகால நிலை மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற கடுமையான சட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்துவது தேசிய நல்லிணக்கத்தை நோக்கிய அர்த்தமுடைய முன்னேற்றங்களை பாதிக்கும் என்று மனித உரிமைகள் அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் நீக்குவதாக உறுதியளித்த சட்டங்களின் கீழ் சிறுபான்மைச் சமூகங்கள் விகிதப் பொருத்தமில்லாத முறையில் தொடர்ந்தும் கண்காணிப்புள்ளாகி தொல்லைகளுக்கு உள்ளாகும் நிலை தொடருகின்றது என்றும் அந்த அமைப்புக்கள் குற்றச்சாட்டுகின்றன.

ஹிப்ஹொப் சங்கீ மீதான வழக்கு ஜுன் 17 ஆம் திகதி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படவிருக்கும் நிலையில், அவரது விடயம் உளளூர் பொலிஸ் விவகாரம் என்ற நிலையிலிருந்து மாறி, மனித உரிமைகள், பேச்சுச் சுதந்திரம் மற்றும் இனங்களுக்கு இடையிலான உறவுகள் ஆகியவற்றைக் கையாளுவதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அணுகுமுறைகளுக்கான ஒரு முக்கிய பரீட்சார்த்தமாக உருவெடுத்திருக்கிறது.

# பெருந்தோட்டத்துறை மறுசீரமைப்புடன் சமூக நீதியும் இணைந்திருக்க வேண்டியது அவசியம்

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

பயன்படுத்தப்படாத நிலங்களையும் சொத்துக்களையும் முதலீடுகளுக்குப் பயன்படுத்துவதன் மூலமும் பெருந் தோட்டத்துறையை நவீனமயமாக்கி ம புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலமும் தனியார் மற்றும் நிறுவன முதலீடுகளை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்ட பெருந்தோட்ட மறுசீரமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை அரசாங்கம் அறிவித்துள்ளது.

தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்தின் இந்த நோக்கங்களை முழுமையாக ஆதரிக்கிறது. எவ்வாறாயினும், பொருளாதார மாற்றமானது சமூக நீதியுடன் கூடியதாக அமைவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம்.

மலையகத் தமிழ் தொழிலாளர்கள் குறித்து கடந்த வாரம் வெளியிடப்பட்ட சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை, தனியார் தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்களின் ஊதியம் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதையும். தொழிலாளர்களின் கடன் சுமை மற்றும் நடமாட்டக் கட்டுப்பாடுகள் போன்றவற்றை பற்றி குறிப்பிட்டிருக்கிறது.

இந்த மறுசீரமைப்பு முன்மொழிவு வெறுமனே வரலாற்று ரீதியான குறைகளுக்கு எதிராக மாத்திரமன்றி, தற்போது தீவிரமாகத் தொடரும் துஷ்பிரயோகங்களின் பின்னணியிலேயே முன்வைக்கப்படுகிறது என்பதை நினைவூட்ட வேண்டியது அவசியமாகும்.

சமூக நீதி இல்லாத பொருளாதார மாற்றம், இலங்கை மீண்டும் ஒருபோதும் திரும்பச் செய்யக் கூடாத ஒரு வழிமுறையையே மீண்டும் உருவாக்கும். அதாவது, உற்பத்தித் திறன் ஆதாயங்களும் முதலீட்டு இலாபங்களும் யாருடைய உழைப்பினால் சாத்தியமானதோ அந்தத் தொழிலாளர்களைச் சென்றடையாமல் தவிடுபொடியாக்கும். இந்தத் தவறு மீண்டும் நிகழக் கூடாது என தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்துகிறது.

மலையகத் தமிழ் சமூகம் எதிர்நோக்கும் நீண்டகால சவால்களுக்கு அவர்களை அரவணைத்து உள்வாங்குவதும் உரிமைகளின் அடிப்படையிலான அதிகாரமளிப்பதும் மிகவும் பொருத்தமானவையாக இருக்கும்.

இவர்களில் பெரும்பாலானோர் 1948 ஆம் ஆண்டில் அவர்களின் குடியுரிமை மறுக்கப்பட்டதன் மரபாக, இன்றும் பொருளாதாரக் கஷ்டங்களையும் சமூக ஓரங்கட்டல்களையும் தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர். மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களை வெறும் உழைப்பாளர்களாக மாத்திரம் பார்க்காமல், அபிவிருத்தியின் நன்மைகளைப் பகிர்ந்துகொள்வதற்கு நியாயமான உரிமையைக் கொண்ட பங்குதாரர்களாக அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என தேசிய சமாதானப் பேரவை அழைப்பு விடுக்கிறது.

வீட்டு உரிமை, பாதுகாப்பான நில உரிமை, தரமான கல்வி, தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் பயிற்சி ஆகியவை ஆரம்பத்திலிருந்தே இந்த மறுசீரமைப்புச் செயல்பாட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். நில ஒதுக்கீட்டிற்கான வெளிப்படையான கொள்கைகளை உருவாக்குவதற்கும், சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கான நம்பகமான பொறிமுறையை வழங்குவதற்கும், அனைத்து இன, மதச் சமூகங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு சுயாதீன தேசிய நில ஆணைக்குழுவை நிறுவுமாறு நாம் அரசாங்கத்தை விசேடமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கை சுதந்திரம் அடைந்து எட்டு தசாப்தங்களை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இக் காலப்பகுதியில், மலையகத் தமிழ் சமூகம் பெருந்தோட்டப் பொருளாதாரத்திற்கு ஏனைய அனைவரையும் விட அதிக பங்களிப்பை வழங்கிய போதிலும், அதற்குப் பிரதிபலனாக மிகக் குறைந்த அளவு பயனையே பெற்றுள்ளது.

எனவே, பெருந்தோட்ட மறுசீரமைப்பின் இரண்டாம் கட்டத்தை நாம் ஒரு வணிக ரீதியான வாய்ப்பாக மட்டும் பார்க்காமல், தலைமுறைகளைக் கடந்து நீடித்து வரும் ஒரு கட்டமைப்பு ரீதியான அநீதியை இலங்கை திருத்தியமைக்குமா என்பதற்கான ஒரு பரீட்சையாகவே பார்க்கிறோம். இந்த மறுசீரமைப்பு யாருக்கு மிகவும் தகுதியானது என்பதை உணர்ந்து, அவர்களுக்கு உண்மையான கண்ணியத்தையும் பொருளாதார பாதுகாப்பையும் வழங்குவதை உறுதி செய்வதற்கான வாய்ப்பும் கடப்பாடும் அரசாங்கத்திற்கு உள்ளது.

மலையகத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்று அநீதியை திருத்துவதை அவர்களுக்கு மட்டும் வழங்கப்படும் ஒரு சலுகையாக பார்க்காமல் ல், இலங்கைக்கு அவசரமாகத் தேவைப்படும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் சமூக ஒற்றுமைக்கான முதலீடாகப் பார்க்க வேண்டும்.

## சூரிய மின்சக்தி...

தெரிவிக்கப்பட் டுள்ளது.

னினும், தற்போது சூரிய மின்சக்தி உற்பத்தியாளர்க ளுக்கு வழங்கப்படும் சராசரி அலகு விலை 18 முதல் 20 ரூபா வரையிலான மட்டத்திற்கு குறைக்கப்பட்டுள்ளதாகவும், இது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையின் வளர்ச் சியை பாதிக்கும் நடவடிக்கையாக இருப்பதாகவும் அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், தேசிய புதுப்பிக்கத்தக்க மின்சக்தி உற்பத் தியை தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கும் முயற்சிகளுக்கு பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்படுவதாகவும், இதன் மூலம் சூரிய மற்றும் காற்றாலை மின் உற்பத்தியாளர்கள் ஊக்கமிழக்கச் செய்யப்படுவதாகவும் குற்றச்சாட் டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், உலகின் பல நாடுகள் சூரிய மற்றும் காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களை நோக்கி வேகமாக நகர்ந்து வரும் நிலையில், இலங்கை தொடர்ந்து டீசல் மற்றும் நிலக்கரி அடிப்படையிலான மின்னுற்பத்தியை நம்பியிருப்பது குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

புதுப்பிக்கத்தக்க ஆற்றலை மேம்படுத்துவதாக அரசி யல் தலைவர்கள் தேர்தல் காலங்களில் வாக்குறுதிகள் வழங்கினாலும், நடைமுறையில் அதற்கான போதிய முன்னுரிமை வழங்கப்படவில்லை எனவும் குறித்த பத்திரிகை தனது கட்டுரையில் விமர்சித்துள்ளது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் அரசாங்கம், இலங்கை மின்சார சபை அல்லது சம்பந்தப் பட்ட அதிகாரிகளின் உத்தியோகபூர்வ பதில்கள் இது வரை வெளியாகவில்லை. (அ)

## அரிசி தட்டுப்பாடு...

தற்போது நிலவும் மத்திய கிழக்கு போர் காரணமாக நாட்டில் எரிசக்தி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் வசந்த சமரசிங்க கூறினார்.

போர் மோதல்கள் தொடர்ந்தாலும், ஏற்றுமதி வருமானம் மற்றும் சுற்றுலாத் துறையை மேம்படுத்தி நாட்டிற்கு சாதக தன்மையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேநேரம் டொலரின் மதிப்பு உயர்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதற்கு தற்போதைய அரசாங்கம் மேலும் இடமளிக்காது என்றும் அவர் வலியுறுத்தினார்.

கடந்த பெரும்போகம் மற்றும் சிறுபோகங்களுக்கு தேவையான உரங்களை வழங்குவதற்குத் தலையீடு செய்ததைப் போல, அடுத்த பெரும்போகத்திற்கு தேவையான உரங்களை இறக்குமதி செய்வதற்கும் அரசாங்கம் தற்போது நடவடிக்கை எடுத்து வருவதாகவும், உர மானியம் 30,000 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

## அரச அதிகாரிகளின் வெளி....

தேவைகள் மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களுக்காக மட்டுமே வெளிநாட்டு பயணங்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும், ஒரே காலப்பகுதியில் [illegible] பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரச அதிகாரிகளின் அடிக்கடி மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு பயணங்களால் ஏற்படும் செலவினங்களை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக அரசியல் தரப்புக்களை மேற்கோள் காட்டி குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சு தரப்பிலிருந்து இதுவரை மேலதிக உத்தியோகபூர்வ விளக்கம் வெளியாகவில்லை. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜுன் - 08 திங்கட்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 25
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : அஷ்டமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வாகன வசதிப்பெருகும். மதிப்புக் கூடும் நாள்.

**இடபம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வீடு வாங்குவது குறித்து யோசிப்பீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புதிய சிந்தனைகள் பிறக்கும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எடுத்த வேலையை முடிக்கமுழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள்.

**சிம்மம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வாகனத்தை சரி செய்வீர்கள். நன்மை கிட்டும் நாள்

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பளிப்பார்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சுப நிகழ்ச்சியில் கலந்துக் கொள்வீர்கள். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள்.

**துலாம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். நல்ல செய்தி வரும்.

**விருட்சிகம்**
எதிர்ப்புகள் அடங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாய்வழி உறவினர்கள் மனஸ்தாபம் வந்து நீங்கும். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். தைரியம் கூடும் நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விஷயங்களை முன்னின்று நடத்துவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். பணப்பற்றாக்குறை யால் பிறரிடம் கைமாற்றாக வாங்க வேண்டி வரும்.

**மீனம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். பொறுமை தேவைப் படும் நாள்.

# புங்குடுதீவில் காணாமற்போன 3 மீனவர்கள் பாதுகாப்பாக மீட்பு!

யாழ்ப்பாணம் ,ஜூன். 08

புங்குடுதீவு கடற்பகுதியில் கடற்தொழிலுக்காக சென்ற நிலையில் காணாமல் போன கடற்தொழிலாளர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு, கரை சேர்க்கப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவு பகுதியை சேர்ந்த மூன்று கடற்தொழி லாளர்கள் நேற்று முன்தினம் கடற்தொழிலுக்கு சென்ற நிலையில் காணாமல் போயிருந்தனர். அவர்களை தேடும்பணிகள் நேற்று முன்தினம் முதல் மேற் கொள்ளப் பட்டது.

இந்நிலையில் கடற்தொழில் அமைச்சரின் பணிப்பின் பேரில் கடற்படையினர் தமது படகுகளில் நயினாதீவு மற்றும் அதனை அண்டிய கடற்பரப் பில் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு, கடற்தொழிலாளர்களை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கடற்தொழிலாளர்கள் இன்றைய தினம் பாதுகாப்பாக குறிகட்டுவான் இறங்குதுறைக்கு அழைத்து வரப்பட்டு , அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

குறித்த மீட்பு நட வடிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரனும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வளலாயில் 230 கிலோ கஞ்சா சிக்கியது!

யாழ்ப்பாணம் , ஜூன். 08

அச்சுவேலி இடைக்காடு வளலாய் கடற்பகுதியில் உள்ள பற்றைக்காடு பகுதியில் 230 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. வளலாய் கடற்பகுதியில் உள்ள பற்றைக்காடு ஒன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த கஞ்சா தொகையை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது கைப்பற்றியுள்ளனர்.

மீட்கப்பட்ட கஞ்சா மேல திக சட்ட நடவடிக்கைகளுக்காக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# ஜெயபுரம் பகுதியில் காணாமல் போயிருந்த வனவள திணைக்கள அதிகாரி சடலமாக மீட்பு

கிளிநொச்சி, ஜூன். 08

கிளிநொச்சி மாவட்டம் ஜெயபுரம் பகுதியில் காணாமல் போயிருந்த வனவள திணைக்கள அதிகாரி பாழடைந்த கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் - தம்புத்தேகம பிரதேசத்தை சேர்ந்த 41 வயதான குறித்த வனவள திணைக்கள அதிகாரி, கிளிநொச்சி - ஜெயபுரத்தில் இயங்கும் வட்டார வனவள திணைக்கள அலுவலகத்தில் கடமையாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த நபர் காணாமல் போயிருப்பதாக ஜெயபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து நேற்று முன் தினம் மாலை பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், அவரது சடலம் அலுவலகத்திற்கு அருகில் உள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி போலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

41 வயதான ஆரட்சி பன்டாரகே சந்திர வன்சல கோசல விஜய சேகர என்பவரே இவ்வாறு சட லமாக மீட்கப்பட்டுள்ளார். (அ)

# இரண்டு நாள்கள் சிறப்புற நடைபெற்றது வித்தியானந்தா கல்லூரியின் பவளவிழா

முல்லைத்தீவு, ஜூன் 08

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை பகுதியில் அமைந்துள்ள தேசிய பாடசாலையான வித்தியானந்தா கல்லூரியின் பவளவிழா நிகழ்வு சிறப்புற நடைபெற்றுள்ளது.

1951 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த பாடசாலை 75 ஆண்டுகளை தொட்டு, இவ் ஆண்டு பவளவிழாவினை கொண்டாடுகின்றது.

கடந்த இரண்டு நாள்கள் காலை, மாலை என நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நடைபெற்ற பவள விழா நிகழ்வுக்கு பாடசாலை அதிபர் க.வீரசிங்கம் தலைமை தாங்கினார்

முதல் நாள் நடைபெற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக கல்வி அமைச்சின் தமிழ் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளை கல்விப்பணிப்பாளர் செ. பிரணவதாசன், இலங்கை மின்சார சபையின் முன்னாள் பிரதிப்பொது முகாமையாளர் இ.கணேஸ்வரன் ஆகியோரும்,

இரண்டாம் நாள் நடைபெற்ற நிகழ்விற்கு மேல் நீதிமன்ற நீதிபதி அ.யூட்சன், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் பாடசாலையில் கல்விகற்று சிறந்த பெறுபேற்றினை பெற்றவர்கள், பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்கள் கௌரவிக்கப் பட்டுள்ளதுடன், பாடசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்கு உதவிய பழைய மாணவர்கள் மற்றும் புலம்பெயர் நாடுகளின் பழைய மாணவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் கௌரவிக் கப்பட்டனர்.



சிறப்பு நிகழ்வாக, வைத்தியத்துறையில் சமூக சேவைக்காக தன்னை அர்ப்பணித்த வைத்திய கலாநிதி வீரகத்திப் பிள்ளை சண்முகராஜாவும், ஐக்கிய நாடுகள் சபையின் இராஜதந்திர அந்தஸ்து பதவியில் உள்ள கலாநிதி விஜயகுமார் நவநீதனும் வித்தியின் சிறப்புமிகு மைந்தன் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து வித்தியானந்தா கல்லூரியின் பெருமைகூறும் வித்தியாதீபம் பவளவிழா சிறப்பு மலர் வெளியீட்டு வைக்கப்பட்டது.

மலரினை பாடசாலை அதிபர் க.ஜெயவீரசிங்கம் வெளியிட்டு வைக்க வடமாகாண ஆளுனர் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து சிறப்பு பிரதிகள் பிரதம விருந்தினரினால் வழங்கிவைக்கப்பட்டன.

இங்கு உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், பல்கலைக் கழகத்துக்கு அதிக எண்ணிக்கையான மாணவர்களை அனுப்புவதில் ஒரு பாடசாலைக்குப் பெருமை கிடையாது. எத்தனை மாணவர்களைத் தமது சமூகத்துக்குச் சேவை மனப்பாங்குடன் பணியாற்றுவதற்கு வழங்கியுள்ளோம் என்பதில்தான் ஒரு பாடசாலைக்கு உண்மையான பெருமை கிடைக்கும் என தெரிவித்தார்.

நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதும் போஷிப்பதும் அரசின் பொறுப்பாகும்!

## சிங்கள ராவய சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன். 08

இலங்கையின் அரசியலமைப்பின் பிரகாரம் பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதும் அதனைப் போஷிப்பதும் அரசாங்கத்தின் அடிப்படைப் பொறுப்பாகுமென சிங்கள ராவய தேசிய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் வலியுறுத்தியுள்ளார்.

சிங்கள ராவய அமைப்பின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,சமூக ஊடகங்களில் அண்மைக்காலமாக மத எதிர்ப்பு கருத்துகளை முன்வைக்கும் குழுக்கள் மிகத் திட்டமிட்ட வகையில் செயற்பட்டு வருகின்றன. பல அரசியல் கட்சிகளின் கொள்கைகளில் மதமற்ற தன்மை பகிரங்கமாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பௌத்த சாசனத்தை வீழ்த்தும் நோக்கில் சூட்சுமமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

மகா சங்கத்தினரிடையே ஏற்படும் சிறு விடயங்களைக் கூடப் பெரிதுபடுத்தி, முழு பிக்கு சமூகத்தையும் அவமதிக்கும் வகையிலும், சாசனத்துக்கு களங்கம் விளைவிக்கும் வகையிலும்இவர்கள்செயற்படுகின்றனர்.

புத்த பெருமானின் காலத்தில்கூட, சாசனத்தின் ஒழுக்கத்தை நிலைநாட்ட விநய விதிகள் பிறப்பிக்கப்பட்டன. ஆரம்பத்தில் சாசனத்துக்கு வந்தவர்கள் துறவறத்தின் மேன்மையை உணர்ந்து வந்தனர்.

பின்னர் வந்த காலங்களில் பல்வேறு சமூக மற்றும் குடும்ப நெருக்க டிகளுக்கு உள்ளானவர்கள் பாதுகாப்பைத் தேடி சாசனத் துக்குள் வந்தனர்.

இத்தகைய சூழலில்தான் புத்த பெருமான் சாசனத்தின் பாதுகாப்புக்காக ஒழுக்க விதிகளை வகுத்தார்.

வரலாற்று உண்மைகளைச் சரிவர அறியாத, பௌத்த தர்மம் குறித்து எவ்வித புரிதலும் இல்லாத நபர்கள், இன்று பிக்கு சமூகத்தை விமர்சிப்பது முற்றிலும் கண்டிக்கத்தக்கது.


நான் சிறு வயதிலேயே புத்த பெருமானின் கருணை மீதான ஈர்ப்பினாலும், மதிப்பினாலும் துறவறத்தை மேற்கொண்டேன். சாசனத்துக்குள் நுழையும் சிறுவர்களுக்கே ஒழுக்க நெறிகள் மற்றும் சீலங்கள் முறையாகக் கற்பிக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில், ஒரு சில பிக்குகளின் தவறுகளை முன்வைத்து, முழு பிக்கு சமூகத்தையும் கொச்சைப்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களில் செயற்படும் நபர்கள் மீது அரசாங்கம் ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது?

பல்லேகம தேரர் தொடர்பான சம்பவம் விவகாரத்தில், அவர் மீதான சட்ட நடவடிக்கைகள் சட்டப்படி முன்னெடுக்கப்படுகின்றன. அதில் எமக்கு மாற்றுக் கருத்து இல்லை.

ஆனால், அந்தச் சம்பவத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, சமூக ஊடகப் பக்கங்களின் ஊடாக ஒட்டுமொத்த பிக்கு சமூகத்தையும் இழிவுபடுத்துபவர்கள் மீது அரசு ஏன் மௌனம் காக்கிறது?

இவ்வாறான நபர்கள் வெளிநாடுகளில் இருந்து அல்லது பிற மதக் குழுக்களில் இருந்து நிதி பெற்றுக்கொண்டு பௌத்த சாசனத்தை அழிக்க முற்படுகிறார்களா என்ற சந்தேகம் எழுகிறது. பௌத்த பிக்குகளுக்கும் பொறுமைக்கு ஒரு எல்லை உண்டு என்பதை



நினைவில் கொள்ள வேண்டும். அரசியலமைப்பின் பிரகாரம் பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்.

எனவே, நாடு பெரும் குழப்பத்துக்கு உள்ளாகும் வரை காத்திருக் காமல், இவ்வாறான சமூக ஊடகப் பக்கங்களைச் சட்ட ரீதியாகக் கட்டுப்படுத்துமாறும், பிக்கு சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அரசாங்கத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றேன்-என்றார்.

(அ)

# அரசின் 600 போலி இலச்சினைகளுடன் இரகசிய மத்திய நிலையம் முற்றுகை!

கொழும்பு, ஜூன். 08

கொழும்பு, பொரளை பகுதியில் போலி ஆவணங்கள், தேசிய அடையாள அட்டைகள் மற்றும் வாகன இலக்கத் தகடுகளை தயாரித்து வந்த இரகசிய மத்திய நிலையம் ஒன்றை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பெருமளவிலான போலி ஆவணங்கள் மற்றும் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொரளை, என். எம். பெரேரா மாவத்தையில் உள்ள வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து, நீண்டகாலமாக இந்த போலி ஆவண தயாரிப்பு மத்திய நிலையம் இரகசியமான முறையில் நடத்தப்பட்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, 600 போலி உத்தியோகபூர்வ இலச்சினைகள், காணிப் பதிவு அலுவலகத்தின் முத்திரையிடப்பட்ட பிரதிகள் அடங்கிய 2 அசல் கோப்புகள், 4 போலி தேசிய அடையாள அட்டைகள், போலி ஆவணங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட மின்னணு உபகரணங்கள் மற்றும் தட்டச்சு இயந்திரம் ஒன்று, ஒரு கார் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள், 1.5 மில்லியன் ரூபா பணம் ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட் டுள்ளன.

பொலிஸாரின் கூற்றுப்படி, கைப்பற்றப்பட்ட இலச்சினைகளுள் முக்கிய அரச திணைக்களங்கள், சமாதான நீதவான்கள், சான்றுறுதியாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் பல்வேறு உயர் அதிகாரிகளின் போலி இலச்சினைகளும் அடங்குகின்றன.

குறித்த இடத்தை பொலிஸார் முற்றுகையிட்ட போது அங்கு இருந்த இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் வெளிவந்த தகவலின் அடிப்படையில், நுகேகொடை, தெல்கந்த பகுதியில் வைத்து மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் 54, 55 மற்றும் 59 வயதுடைய பொரளை, திக்வெல்ல மற்றும் ஹொரண ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

(அ)

# கணவருக்கு அநீதி இழைக்கப்படுகிறது

## மனோரி சாலே வாக்குமூலம்

கொழும்பு, ஜூன். 08

எனது கணவர் அப்பாவி என்பது அனைவருக்கும் தெரியும். குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் செயற்பாடுகள் அநீதியானது. அவரை ஒரு பலிக்கடாவாக ஆக்கியிருப்பது அனைவருக்கும் தெரிகின்றது என அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் தலைவர் சுரேஷ் சாலேயின் மனைவி மனோரி சாலே தெரிவித்துள்ளார்.

முதல் தடவையாக நேற்று முன் தினம் சி.ஐ.டிக்கு வந்த நிலையில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அவருக்கு அதிகமான சித்திரவதைகள் கொடுக்கப்பட்டுள்ளதாக சட்ட மருத்துவ அதிகாரி அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் சாகும் வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார். அதை எவ்வாறாயினும் அதை நிறுத்த அவர் விரும்பவில்லை.

நாங்கள் அவரது மனதை மாற்ற முடியுமா என்று பல முறை பேசிப் பார்த்தோம். ஆனால், அவர் பயங்கரவாத சட்டத்திற்கு எதிராகவே இதைச் செய்வதாகக் கூறியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எனது கணவர் தற்போது சாகும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார். அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டிய அவசியம் உள்ளது.

நாட்டுக்காக 38 வருடங்கள் சேவையாற்றிய ஒருவருக்கு இவ்வாறு நடப்பது அநீதியானது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஓமந்தையில் குடும்பஸ்தர் ஒருவர் ஆயுதத்தால் தாக்கிப் படுகொலை!

வவுனியா, ஜுன். 08

வவுனியா மாவட்டம் ஓமந்தை - நாவற்குளத்தில் கோயில் பூசை தொடர்பாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில், குடும்பஸ்தர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் 32 வயதான ஒரு பிள்ளையின் தந்தையான சேதுபதி நிரோஜன் என்பவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன், அவருடைய தாய் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குளம் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் கதவை உடைத்து, ஆறு பேர் கொண்ட குழுவொன்று வலுக்கட்டாயமாக பூசை செய்வதற்கு முற்பட்டுள்ளனர்.

குறித்த சட்டவிரோதமான செயலை அந்த இடத்திலிருந்த கொலையுண்டவரின் தாய் தட்டிக்கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அக்குழுவினர் தாய் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இது தொடர்பாக மகன் அவர்களிடம் கேட்கச் சென்றுள்ள போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறிய நிலையில், அக்குழுவினர் மறைத்து வைத்திருந்த கத்தியால் அவரை குத்தியுள்ளனர்.

இதனால் பலத்த காயமடைந்த இளைஞனை அங்கிருந்தவர்கள் மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும், அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

கொலைச் சம்பவம் தொடர்பாக ஓமந்தைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளையும், ஏனைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ)

## சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா டான் தொலைக்காட்சிக்கு விஜயம்



யாழ்ப்பாணம், ஜுன். 08

வடக்கிற்கு விஜயம் மெற்கொண்டுள்ள மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் நேற்று யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருகை தந்தார். யாழ் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் அவர் நேற்று காலை டான் தொலைக்காட்சி தலைமைக் காரியாலத்திற்கு வருகை தந்திருந்தார்.

அவரை டான் தொலைக்காட்சிக் குழும தலைமை செயற்பாட்டு அதிகாரி இளையதம்பி செல்வச்சந்திரன் வரவேற்றார். தொடர்ந்து டான் குழுமத் தலைவரை சந்தித்த அமைச்சர், சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்டார்.(அ)

## நிலாவெளிக் கடையொன்றில் பெண்ணின் சங்கிலி அபகரிப்பு

திருமலை, ஜுன்.08

திருகோணமலை - நிலாவெளியில் கடையொன்றில் வைத்து வயோதிபப் பெண்ணின் தங்க சங்கிலி அபரிக்க திருகோணமலை - நிலா வெளி பொலிஸ் பிரிவில் கடை யொன்றில்வைத்து வயோதிபப் பெண்ணின் தங்க சங்கிலி அபரிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நகர பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பொருட்களை கொள்வனவு செய்வது போலபாசாங்கு செய்து சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

கடையில் பொருத் தப்பட்ட சி.சி.ரிவியில் இக் காட்சிகள் பதிவாகியுள்ளன.

சி.சி.ரிவி வீடியோவின் உதவியுடன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சந்தேக நபர்கள் தொடர்பில் தெரிந்தவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்க முடியும் என்பதும் குறிப்பிடத் தக்கது. (அ)

## பட்டிருப்பு கல்வி வலய விளையாட்டு விழா

மட்டக்களப்பு, ஜுன்.08

மட்டக்களப்பு பட்டிருப்பு வலயக்கல்வி பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான வலய மட்ட விளையாட்டுப் போட்டி வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் தலைமையில் தலைமையில் செட்டிபாளையம் கண்ணகி விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக வர்த்தகம் வாணிபம் உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஆர். நெடுஞ்செழியன் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண காணி சீர்திருத்த ஆணையாளர் என். விமல்ராஜ் ஓய்வு நிலை வலயக்கல்வி பணிப்பாளர் கே. பாஸ்கரன் உட்பட பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் அதிபர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் ஆசிரியர்கள் உடற்கல்வி பயிற்று விப்பாளர்கள் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பட்டிருப்பு கல்வி வலய மானது கடந்த வருடம் நடைபெற்ற மாகாண தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளிலும் பல சாதனைகளைப் படைத்திருந்தது. இங்கு நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. (அ)

## உத்தியோகபூர்வ கூட்டங்களை தவிர்க்கும் பிரதேச செயலர்கள்

கொழும்பு, ஜுன். 08

இலங்கை பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி பிரதேச செயலாளர்கள் சங்கம், இன்று முதல் பொதுமக்கள் தினமாக ஒதுக்கப்பட்டுள்ள திங்கள்கிழமைகளில் நடைபெறும் எந்த வொரு நேரடி அல்லது இணையவழி உத்தியோகபூர்வ கூட்டங்களிலும் பங்கேற்க முடியாது என்று அறிவித்துள்ளது.

பொதுமக்கள் தினங்களில் அமைச்சுகள், அரச நிறுவனங்கள் மற்றும் அரசியல் தலைமைகள் நடத்தும் கூட்டங்களால் பிரதேச செயலகங்களின் அன்றாடப் பணிகளும் பொதுமக்கள் சேவைகளும் பாதிக்கப்படுவதாக சங்கம் தெரிவித்துள்ளது.

அரசு நிர்வாக சுற்றறிக்கை 27-2023 இன் படி, திங்கள்கிழமைகளில் அதிகாரிகள் அலுவலகங்களில் இருந்து மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்றும் அன்றைய தினம் உத்தியோகபூர்வ கூட்டங்கள் நடத்தக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதால், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## நீரை சிக்கனமாக பயன்படுத்தக் கோரிக்கை

கொழும்பு, ஜுன். 08

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் 73 பிரதான நீர்த்தேக்கங்களில், அவற்றின் மொத்தக் கொள்ளளவிலிருந்து 63 சதவீதமான நீர் தற்போது சேமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதன் காரணமாக, எதிர்வரும் சிறுபோக பயிர்ச்செய் கைக்குத் தேவையான நீரை முறையாக வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும், வரும் நாட்களில் மழைவீழ்ச்சி குறையக் கூடும் என எதிர்பார்க் கப்படுவதால், நீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்து மாறு நீர்ப்பாசனத் திணைக்க ளம் பொது மக்களிடம் கேட்டுக்கொண் டுள்ளது. (அ)

## அமரபுர மகா நிகாயவின் புதிய தேரரின் பதவியேற்பு நிகழ்வில் பிரதமர் ஹரிணி

கொழும்பு, ஜுன். 08

மகாவிஹார வம்சிக இலங்கை அமரபுர மகா நிகாயவின் ஆரியவன்ச சத்தம்மயுக்திக பிரிவின் புதிய மகாநாயக்கராக அதிவணக்கத்துக்குரிய வல்பொல விமலஞான மகாநாயக்க தேரர் பதவியேற்றுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது, பேலிய கொடை கங்காராம விகாராதிபதி, அக்கமஹா சத்தம்மஜோதி கதஜ, தம்மசேனாபதி, பாஷாந்தர விஷாரத, அதிவணக்கத்துக்குரிய வல்பொல விமல ஞான மகாநாயக்க தேரர், மகா விஹார வம்சிக இலங்கை அமர புர மகா நிகாயவின் ஆரியவன்ச சத்தம்மயுக்திக பிரிவின் மகாநாயக்க பதவியேற்பிற்கான சன்னஸ்பத்திரக் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது

இந்நிகழ்வில் கௌரவ பிரதமர் கலாநிதி ஹரிணி அமர சூரிய முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். (அ)

## கார் மோதி இரு பெண்கள் பலி!

கொழும்பு, ஜுன். 08

ஹங்வெல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எம்புல்கம - பனாகொட வீதியில் நேற்று முன் தினம் மாலை இடம் பெற்ற கார் விபத்தில் இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

வீதியின் ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்தவர்கள் மீது எம்புல்கம நோக்கி பயணித்த கார் ஒன்று மோதியுள்ளது.

விபத்தை ஏற்படுத்திய கார் நிறுத்தப்படாமல் தப்பிச் சென்ற நிலையில், காயமடைந்த பெண்கள் இருவரும் நவகமுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் ரனால மற்றும் கிராந்துருகோட்டே பகுதிகளைச் சேர்ந்த 42 மற்றும் 44 வயதுடைய பெண்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், விபத்தை ஏற்படுத்திய காரை பறிமுதல் செய்ததுடன், தப்பியோடிய ஓட்டுநரையும் கைது செய்துள்ளனர். விபத்தின் போது ஓட்டுநர் மது அருந்தியிருந்தமை விசாரணையில் உறுதியாகியுள்ளது.

## 75 இளைஞர்கள் கைது!

கொழும்பு, ஜுன். 08

அம்பலாங்கொடை இடம் தோட்ட பகுதியில் சமூக ஊடகங்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்து உபசாரத்தில் பொலிஸார் நடத்திய அதிரடிச் சோதனையில் போதைப் பொருட்களுடன் 75 இளை ஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு நடைபெற்ற இந்த நடவடிக்கையின்போது கஞ்சா, ஐஸ், ஹெரோயின், ஹசிஷ் உள்ளிட்ட பல் கள் [illegible] பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மனைவி தாக்கி கணவன் பலி!

கொழும்பு, ஜுன்.08

ஹொரணை - அரம்பகந்த பகுதியில் கூர்மையான ஆயுதத்தால் மனைவி தாக்கியதில் கணவன் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் அரம்பகந்த, ஹொரணை பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய நபராவார்.

குறித்த நபருக்கும் அவரது மனைவிக்கும் இடையே வீட்டில் ஏற்பட்ட தகராறின் போது, மனைவி கூர்மையான ஆயுதத்தால் தாக்கி இக்கொலையைச் செய்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புதிய உயர்கல்வி கொள்கை...

மற்றும் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்தே தற்போது பொதுமக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கான இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## தமிழ்ப் பாடகரின் கைது...

கலைஞரைப் பற்றி பலரும் பேசுகின்றனர்.

இதுவரை அவரது திறமையையும் படைப்புகளையும் கண்டுகொள்ளாதவர்கள், இன்று அவரை பற்றி கருத்து தெரிவிக்க முன்வருகின்றனர்.

குறைந்தபட்சம் இப்போது அவரது திறமை வெளிச்சத்திற்கு வந்திருப்பது ஒரு வகையில் ஆறுதலாக இருக்கிறது.

இசை என்பது மக்களின் உணர்வுகளையும் அனுபவங்களையும் வெளிப்படுத்தும் ஒரு கலை வடிவமாகும்.

கலைஞர்கள் தங்களது உணர்வுகளை இசை ஊடாக வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களில், அதனால் அவர்கள் பாதிக்கப்படாத வகையில் எதிர்காலத்தில் சட்டங்களில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு எனக்குள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் பல திறமையான பாடகர்கள், இசைக் கலைஞர்கள் மற்றும் நடிகர்கள் உள்ளனர்.

எனினும், அவர்களது திறமைக்கேற்ற அங்கீகாரமும் பிரதிபலனும் பல சந்தர்ப்பங்களில் கிடைப்பதில்லை.

சிலரின் திறமைகள் திருடப்படுகின்றன் சிலரின் படைப்புகள் பிறரால் பயன்படுத்தப்பட்டு பொருளாதார பலன்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

ஆனால் உண்மையான திறமையாளர்கள் முன்னேறுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளன.

பொலிஸார் கைது செய்த பிறகே இந்தப் பாடகரை அனைவரும் திரும்பிப் பார்க்கின்றனர்.

ஆனால் அதற்கு முன்னர் அவரது பாடல்களை எத்தனை பேர் கவனமாகக் கேட்டார்கள், அவரது திறமையை எத்தனை பேர் மதித்தார்கள் என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும்.

கைது செய்யப்பட்டவர் சட்டத்தின் அடிப்படையில் நியாயமான விசாரணையைப் பெற்று, சட்டத்தின் ஊடாகவே விடுதலையாக வேண்டும் என்பதே எமது நிலைப்பாடும் இலக்குமாகும்-என்றார். (அ)

## சுரேஷ் சாலே நேற்று இரவு...

எனினும், அவரது தற்போதைய உடல்நிலை தொடர்பான மேலதிக தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவருக்கு ஏற்பட்ட திடீர் உடல்நலக் குறைவினால் அவர் இவ்வாறு சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், குற்றப் புலனாய்வுத் திணைக்கள காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலே மீது மனிதாபிமானமற்ற நடத்தைகள் மேற்கொள்ளப்பட்டதாகக் குற்றஞ்சாட்டி, அவரது மனைவி பொலிஸ் மா அதிபருக்கு நேற்றுக் கடிதம் ஒன்றை அனுப் பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், சுரேஷ் சாலே தடுப்புக் காவலில் இருக்கும் காலப்பகுதியில் சித்திரவதை, கொடூரமான மற்றும் மனிதாபிமானமற்ற நடத்தைகள், அதிகார துஷ்பிரயோகம், மருத்துவ சேவை மறுப்பு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பில் சுயாதீன குற்றவியல் விசாரணை நடத்துமாறு கோரப்பட்டுள்ளது.

ஜூன் 6 ஆம் திகதி குடும்பத்தினருடன் இடம்பெற்ற சந்திப்பின்போது சுரேஷ் சாலே தனது மகன் மற்றும் சகோதரரிடம் பகிர்ந்துகொண்ட தகவல்களின் அடிப்படையில் 10 முக்கிய விடயங்கள் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அவர் எதிர்கொண்டதாகக் கூறப்படும் நடத்தைகள் அவரது பாதுகாப்பு, உடல்நலம், மனித மரியாதை மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பில் கடுமையான கவலைகளை எழுப்புவதாக அவரது மனைவி சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சியான மன உளைச்சல், இழிவான நடத்தைகள் மற்றும் அமைப்புசார் அநீதிகளை இனியும் தாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த சுரேஷ் சாலே, "சாகும் வரை உண்ணாவிரதம்" ஒன்றை ஆரம்பித்துள்ளதாகவும் குடும்பத்தினரிடம் கூறியதாகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது நிலுவையில் உள்ள நீதிப் பேராணை வழக்குகள் மூலம் தனது நிரபராதித்தனம் நிரூபிக்கப்படும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும், தமக்கு ஏதேனும் நேர்ந்தாலும் சட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு தனது சட்டத்தரணிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்ணாவிரதம் மற்றும் உடல்நலக்குறைவு குறித்த தகவல்களை முன்னிறுத்தி, உடனடியாக தலையிட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுரேஷ் சாலேயின் மனைவி காவல்துறை மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், மனிதாபிமானமற்ற நடத்தைகள் தொடர்பில் கடந்த மார்ச் 7 ஆம் திகதியே தனியே ஒரு முறைப்பாடு பொலிஸ் மா அதிபர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாகவும், இதுவரை அதற்கான எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டதா, சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டனவா அல்லது விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்பட்டனரா என்பது பற்றியும் குடும்பத்தினருக்கு எவ்வித தகவலும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் காவலில் உள்ள ஒருவரின் உயிர், உடல்நலம், பாதுகாப்பு, மனித மரியாதை மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமைகளைப் பாதுகாக்க அரசுக்கு விசேட பொறுப்பு இருப்பதால், இந்த விவகாரத்தில் பதிலளிக்கத் தவறியிருப்பது மிகவும் கவலைக்குரியது என்றும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனால், அண்மையில் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தை புதிய முறைப்பாடாகவும் அவசர தலையீடு கோரும் கோரிக்கையாகவும் கருதி, உடனடி விசாரணை மற்றும் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபரிடம் அவர் கோரியுள்ளார்.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் சுரேஷ் சாலே கடந்த பெப்ப்ரவரி 25 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டார். அதன்பின்னர் நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ச்சியாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கலைஞரான சங்கீர்த்தனனை...

கிளிநொச்சியை நிரந்தர முகவரியாகக்கொண்ட சொல்லிசைக் கலைஞர் கணேஸ்குமார் சங்கீர்த்தனன் அவர்களின் விடுதலை தொடர்பான விடயத்தினை தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

தனது இனத்தின் வரலாற்று வலிகளையும், இழப்புகளையும், மன உணர்வுகளையும் இசை மற்றும் பாடல் வழியாக வெளிப்படுத்திய ஓர் இளைஞன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பது, தமிழ் மக்களிடையே மிகுந்த அதிருப்தியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. ஒரு கலைப் படைப்பின் ஊடாக வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களை குற்றமாகக் கருதி, அதற்காக ஓர் இளைஞனின் சுதந்திரம் பறிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுவது, இந்த நாட்டில் தமிழர்கள் எதிர்கொள்ளும் கருத்துரிமைச் சவால்களின் தீவிரத்தையே எடுத்துக்காட்டுவதாக மக்கள் கருதுகின்றனர்.

குறிப்பாக, தமிழ் மக்களினதும் இளைஞர்களினதும் நம்பிக்கையையும் மாற்றத்திற்கான எதிர்பார்ப்பையும் அடித்தளமாகக் கொண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் இத்தகைய கைது இடம்பெற்றிருப்பது, தமிழ் மக்களின் மனங்களில் ஆழமான ஏமாற்றத்தையும் நம்பிக்கைச் சிதைவையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த பாராளுமன்றத் தேர்தல் காலங்களில் தற்போதைய தேசிய மக்கள் சக்தி பிரதிநிதிகளும் கூட, தமிழர் ஆயுதப்போராட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பாடல்கள், நினைவுகள் மற்றும் அரசியல் குறியீடுகள் காணப்பட்ட சூழல்களில் மக்களின் ஆதரவை நாடியமை மறுக்க முடியாத வரலாற்று உண்மையாகும். அவ்வாறிருக்க, இன்று ஒரு இளைஞர் பாடல் ஒன்றை வெளியிட்டதற்காகவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவது, சட்டத்தின் பயன்பாடு தொடர்பில் பாரிய முரண்பாடுகளையும் நியாயப்பூர்வமான கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

இவ்விடயத்தில் மனிதாபிமான அடிப்படையிலும், நல்லிணக்கத்தின் அடிப்படையிலும், நாட்டின் அனைத்து மக்களுக்கும் சமநீதியை உறுதிப்படுத்தும் அடிப்படையிலும் தங்களது நேரடி தலையீட்டின் மூலம், கைது செய்யப்பட்டுள்ள கலைஞர் சங்கீத்சன் அவர்களுக்கு தங்களது அரசியலமைப்புச் சட்ட அதிகாரங்களின் கீழ் பொது மன்னிப்பு வழங்குவதன் மூலம் உடனடி விடுதலையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்-என்றுள்ளது. (அ)

## இடைநிறுத்தப்பட்டிருந்த 25...

வழிகாட்டலில் இத்திட்டம் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 2014, 2016, 2017, 2018, 2019 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டுப் பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்ட திட்டங்களே இவ்வாறு நிறைவு செய்யப்படவுள்ளன. இதற்காக கடந்த 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் 16,000 மில்லியன் ரூபாவும், 2026ஆம் ஆண்டு 19,000 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2027ஆம் ஆண்டில் 38,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தாய்-சேய் நலம், புற்றுநோய், இதய நோய் மற்றும் தலசீமியா சிகிச்சை பிரிவுகள், அவசர விபத்துப்பிரிவு மற்றும் சுகாதார அமைச்சின் பிரதான கட்டடப்பணிகள் என்பன நிறைவடையவுள்ளன.

கொழும்பு டி சொய்சா மகப்பேற்று வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பிரிவு (389 மில்லியன் ரூபா) நிறைவடைந்துள்ளது. கொழும்பு சிறுவர் வைத்தியசாலையின் 12 மாடிகளைக் கொண்ட சிறுவர் இதய பிரிவு (6,218 மில்லியன் ரூபா) இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

கண்டி தேசிய புற்றுநோய் சிகிச்சை பிரிவின் 8 மாடிக் கட்டடம் (400 மில்லியன் ரூபா) நிறைவடைந்துள்ளது. பதுளை போதனா வைத்தியசாலையின் 10 மாடிக் கட்டடம் மற்றும் 6 மாடி புற்றுநோய் பிரிவுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன (1,000 மில்லியன் ரூபா). யாழ் போதனா வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு (2ஆம் கட்டம்), கரப்பிட்டிய, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை மற்றும் கண்டி ஆகிய வைத்தியசாலைகளின் விசேட சிகிச்சை பிரிவுகளுக்காக 1,750 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

2014இல் ஆரம்பிக்கப்பட்ட சுகாதார அமைச்சின் பிரதான அலுவலகக் கட்டடப் பணிகளுக்காக இம்முறை 3,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் முல்லேரியா, கேகாலை, திருகோணமலை, அம்பாறை, சிலாபம் ஆகிய வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகளும் அபிவிருத்திசெய்யப்பட உள்ளன. இவற்றுடன், ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமையின் (ஜைகா) உதவியுடன் 15 மருத்துவக் கழிவுத் தகனஉளை இந்த ஆண்டிற்குள் நிறுவப்பட உள்ளன. அத்தோடு வைத்தியசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளைப் புதுப்பிக்க 8,800 மில்லியன் ரூபாவை ஒதுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சானி அபேசேகரவின் சித்திரவதையால்...

உத்தியோகபூர்வ முகப்பு புத்தகத்தில் மேற்கண்டவாறு பதிவேற்றம் செய்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நான் ஒரு எதிர்பாராத சூழ்நிலையில் "சாலே" என்பவரை அடையாளம் கண்டுகொண்டேன். கருணா அம்மான் 2004 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பி லிருந்து விலகி, புலிகள் அமைப்புக்கு எதிராக போராடினார்.இதன்பின்னர் விடுதலை புலிகள் அமைப்பு கருணா அம்மானை அனைத்து உத்தியோகபூர்வ பதவிகளிலிருந் தும் நீக்கியது. அதன் பின்னர் கருணா அம்மான் தப்பி யோடினார்.

இந்தச் செய்தியை அறிந்தவுடன் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க என்னை அழைத்து, உடனடியாக ஜனாதிபதியை சந்தித்து இதுகுறித்து உண்மைத் தன்மையை அறிந்துகொள்ள வேண்டும் என்று கூறினார். நான் உடனடியாக அமைச்சர் மங்கள சமரவீரவை அழைத் தேன். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சுமார் அரைமணி நேரத்திற்குப் பிறகு என்னை அழைத்து, ஜனாதிபதி மாளிகைக்கு வருமாறு எங்களுக்கு அழைப்பு விடுத்தார்.

அது சிங்கள புத்தாண்டு காலம். சோமவன்ஸ அமர சிங்க, நான் மற்றும் நந்தன குணதிலக அல்லது ரில்வின் சில்வா சரியாக ஜனாதிபதி மாளிகைக்கு சென்றோம். சுமார் அரைமணி நேரத் தாமதத்திற்குப் பிறகு, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க நாங்கள் தங்கியிருந்த அறைக்கு வந்தார். நிலைமையை விவரிக்குமாறு, இராணுவ தளபதிக்கு அவர் குறிப்பிட்டார். அதை நாங்களும் ஏற்றுக்கொண்டோம். இராணுவ தளபதி அதற்கு அனு மதி வழங்கி, என்ன நடக்கிறது என்பதை வரைபடத்தின் மூலம் விளக்குமாறு எனக்கு முன்னதாக "விருப்பமளிக் கும் வகையில் தோன்றிய" அந்த இளம் இராணுவ அதிகாரியிடம் பொறுப்பை ஒப்படைத்தார்.

அவர் ஒவ்வொன்றாக நடந்த சம்பவங்களின் சங்கிலித் தொடர் குறித்தும், அதற்குள் மறைந்திருக்கும் உண்மை கள் குறித்தும், இலங்கை அரசு ஏன் இந்த போக்கைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்கான கார ணம் குறித்தும் கருத்து தெரிவித்தார். கருணா அம்மான் தொடர்பான இந்த சம்பவத்தை முன்வைத்த அந்த இளம் அதிகாரி. நான் இதுவரை கண்டிராத அளவுக்கு மிகவும் சிறப்பாகவும் தொழில்முறை சார்ந்தவராகவும் எனக்குத் தோன்றியதால், எண்ணுள் ஒரு தெளிவும் முடிவும் ஏற்பட்டது.

சில நாள்களுக்குப் பிறகு, எனக்குத் தெரிந்த இராணுவ புலனாய்வுப் பிரிவின் நடுத்தர அளவிலான அதிகாரி ஒருவர் என்னை தொலைபேசியில் அழைத்து, என்னை நேரில் சந்திக்க விரும்புவதாகக் கூறினார். என்னால் கொடுக்கக்கூடிய மிக நெருக்கமான நேரத்தை அவருக் குக் கொடுத்தேன். அவர்கள் பொரளையில் உள்ள தேசிய இயக்கத்தின் அலுவலகத்திற்கு வந்தனர். அந்த வீடு டாக்டர் குணதாச அமரசேகரவுக்குச் சொந்தமானது. எனக்குத் தெரிந்த புலனாய்வு அதிகாரியுடன், அன்று நான் பார்த்த அந்த இராணுவ அதிகாரியும் வந்திருந்தார்.

அவர் வேறு யாருமல்ல, அவர் சுரேஷ் சாலே. சாலே என் [illegible] கருணா அம்மானை கொழும்புக்கு அழைத்து வந்துள்ளோம். அவருடைய ஆள்களில் இன்னுமொருவரும் இருக்கிறார். ஐரோப்பிய நாடுகளின் அழுத்தம் காரணமாக, கருணா அம்மானை கவனிக்க வேண்டாம் என்று எங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த உத்தரவுக்கு நாங்கள் கீழ்ப்படிய வேண்டும். ஆனால், இந்த வாய்ப்பை தவற விட்டால் அது ஒரு பெரிய இழப்பாகும். நான் உங்களி டம் ஒரு உதவி கேட்கவே வந்தேன்" என்றார்.

விடயத்தை கூறுங்கள், என்ன செய்ய வேண்டும்?" என்றேன் "அவருடைய குழுக்களில் ஒன்றை நாம் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு இடம் இல்லை. உங்களால் முடிந்தால் எங்களுக்கு ஒரு பாதுகாப்பான வீட்டைக் கொடுங்கள். அவர்களை சில காலம் பாதுகாப்பாக வைத் திருங்கள்" என்று சாலே குறிப்பிட்டார்.அதற்கு நான் விரைவில் ஒரு நல்ல பதிலை வழங்குவதாக உறுதியளித்தேன்.

பின்னர் இக்கோரிக்கையை ஜே.வி.பி.யின் அரசியல் குழுவிடம் சமர்ப்பித்தேன். சோமவன்ஸ அமரசிங்க எவ்வித விவாதமும் இன்றி அதற்கு ஒப்புதல் அளித்தார். அந்த வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அதன்படி, சுரேஷ் சாலே எதிர்பார்த்த உதவியை நாங்கள் நிறைவேற்றினோம்.

அவர் தனக்காகவா எங்களிடம் உதவி கேட்டார்? இந்தச் சம்பவம் அவசியமானது என்றால், ஜனாதிபதியின் உத்தரவை மீறியதாகக் குற்றஞ்சாட்ட முடியாது அல்லவா? ஆனால், அது ஒரு தவறாக இருந்தால், அவர் தனது சுய நல நோக்கத்திற்காக அந்தத் தவற்றைச் செய்தாரா? இந்த இடத்தில் ஜே.வி.பி.யின் பிரசார செயலாளராக இருந்த என்னை அவர் சந்தித்தபோது, அவருக்கு ஜே.வி.பி-யுடன் தேவையற்ற தொடர்பு இருந்தது என்று யாராவது விளக்க முடியுமா? புலனாய்வு அதிகாரிகள் மற்றப் படைகளில் இருந்து வேறுபட்டவர்கள். அவர்கள் சமூகத்தின் நல்ல மற்றும் கெட்ட பக்கங்கள் அனைத்தையும் தொட்டுச் செல்ல வேண்டும். எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டும். எங்கள் மீதிருந்த நம்பிக்கையின் அடிப்படை யிலேயே சாலே வந்து அந்த உதவியைப் பெற்றார். அவர் அதை நாட்டின் நலனுக்காக, நாடு அமைதியை வெல்ல வேண்டும் என்பதற்காகவே செய்தார்.

அவர் எனக்கு ஒரு அரணாக இருந்தார் என்பது எனக் குத் தெரியும். ஒரு காலத்தில் கோட்டாபய ஆட்சிக் காலத்தில் சாலே எனக்கு அவ்வளவு தெளிவாகத் தெரியவில்லை என்றாலும், எனக்கு ஒன்று மட்டும் தெரியும். சாலே இந்த நாட்டையும் தேசத்தையும் தனது உயிராக நேசித்தார்.

இன்று என்ன நடக்கிறது என்றால், நந்திக்கடல் வெறுப்பை உமிழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழ்ச்செல்வ னின் தலைக்கு மேல் இருந்த புலனாய்வுத் தகவல்களின் உரிமையாளரிடம் பழிவாங்கும் நடவடிக்கை எடுக்கப்ப டுகிறது. நினைப்பது போல் இதைச் செய்ய முடியாது. எனவே,ஜே.வி.பி தேசியப் பட்டியலில் இருந்த இப்ரா ஹிம் விடுவிக்கப்பட்டதும், உண்மை மறைக்கப்பட்டு தேசப்பற்றாளர்கள் பழிவாங்கப்படுகிறார்கள். இதற்கு நாம் பொறுமையாக இருக்க வேண்டுமா? -என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# தைரியம் இருந்தால் உடனடியாக மாகாணத் தேர்தலை நடத்துங்கள்!

## அரசுக்கு ஐக்கிய மக்கள் சக்தி சவால்

கொழும்பு, ஜுன். 08

ஆளுங்கட்சி தேர்தலை நடத்த அஞ்சி கிராமங்களுக்குள் கூடச் செல்ல முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்கு தைரியமிருந்தால் உடனடியாக மாகாணசபைத் தேர்தலை நடத்தி மக்களின் உண்மையான ஆதரவை அளவிட்டுக் காட்டுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார சவால் விடுத்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு சவால் விடுத்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

டொலரின் பெறுமதியை கட்டுப்படுத்தியதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் இன்று டொலரின் பெறுமதி 348 ரூபாவையும் தாண்டிச் சென்றுள்ளது. இதனால் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் சீனி, பருப்பு, பால்மா உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் சுமார் நூறு சதவீதத்தால் அதிகரித்துள்ளன. அரசாங்கத்தால் டொலர் பெறுமதி உயர்வை தடுத்து நிறுத்த முடிய வில்லை.

அது மாத்திரமின்றி எமது நாட்டின் பிரதான ஏற்றுமதித்துறையான ஆடைத் தொழில்துறைக்கு அமெரிக்கா சில மாதங்களுக்கு முன்னர் 20 வீத வரியை விதித்திருந்தது, கடந்த வாரம் மேலும் 12.5 வீத வரியை விதித்துள்ளது. இதைப் பற்றி அரசாங்கத்தில் யார் பேசுகிறார்கள்? ஆடைத்துறை மட்டுமன்றி, இறப்பர் பாலில் இருந்து தயாரிக்கப்படும் இறப்பர் தயாரிப்புகளையும் அமெரிக்காவே அதிகம் கொள்வனவு செய்கிறது. இதனால் நாட்டின் இறப்பர் விலைக்கும் ஆடைத் தொழில்துறைக்கும் பெரும் ஆபத்து ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

அரசாங்கம் இவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. டொலர் பெறுமதியைக் குறைக்க வேண்டுமாயின் எமது ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும். ஆனால் தற்போது எமது ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால் அரசாங்கமோ தேசிய உற்பத்தி வருமானம் அதிகரித்துள்ளதாகக் கூறிக் கொண்டிருக்கிறது. அவ்வாறு வருமானம் அதிகரித்திருந்தால் மக்களுக்கு எரிபொருள் மானியத்தையாவது வழங்கியிருக்க வேண்டுமல்லவா?

அரசாங்கத்துக்கு தைரியம் இருந்தால் இப்போது மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு சவால் விடுக்கின்றோம். ஒரு நாட்டின் மக்களின் விருப்பு வெறுப்புகளை அறிவதற்காகவே ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்க 43 வீத வாக்குகளையே பெற்றார். அதன் பின்னர் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் சற்று அதிகமாக வாக்குகளைப் பெற்றனர். ஆனால் சில மாதங்களுக்குப் பின்னர் நடந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் அது 40 வீதமாகக் குறைந்தது.

இன்று மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் இவர்கள் 20 வீதத்துக்கும் குறைவான வாக்குகளையே பெறுவார்கள்-என்றார். (அ)

# நெற் செய்கை உர மானியம் 5000 ரூபாவினால் அதிகரிப்பு

கொழும்பு, ஜுன். 08

சிறுபோகத்தில் நெல் விவசாயத்துக்காக ஹெக்டேயர் ஒன்றுக்கு வழங்கப்படும் உர மானியத்தை 30,000 ரூபாய் வரை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போதைய உரக் கையிருப்பு மற்றும் உர விநியோக செயல்முறை குறித்து தெளிவுபடுத்துவதற்காக ஊடகவியலாளர் சந்திப்பொன்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் தம்மிக ரணதுங்க, ஒரு மூடை யூரியா உரத்தை அதிகபட்சமாக 10,200 ரூபாய் என்ற விலையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்-

இதுவரை ஹெக்டேயர் ஒன்றுக்கு 25,000 ரூபாவாக காணப்பட்ட உர மானியம், இந்த பருவம் முதல் நெல் விவசாயத்துக்காக ஹெக்டேயர் ஒன்றுக்கு 30,000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக சுமார் 48,000 மெட்ரிக் டன் அளவு உரம், நாட்டின் அனைத்து கமநல சேவை நிலையங்கள் ஊடாகவும் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும், இந்த அளவு போதுமானதாக இல்லை. இதற்கமைய, அரசாங்கம் மேலும் 15,000 மெட்ரிக் தொன் உரத்தைத் தனியார் துறையிடமிருந்து கொள்வனவு செய்துள்ளது" என தெரிவித்துள்ளார். (அ)

# ஆபத்தில் சிக்கும் மீனவர்களை மீட்க நவீன தொழில்நுட்ப வசதி வேண்டும்!

## வடமாகாண கடற்றொழில் இணையம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுன். 08

மீனவர்கள் கடலில் ஆபத்தின் எதிர்கொள்ளும் வேளையில் அதனை உடனடியாக கண்காணித்து மீட்கும் நடவடிக்கையை மேற்கொள்ளும் நவீன தொழில்நுட்பத்தை கொண்டுவரவேண்டும் என வடமாகாண கடற்றொழில் இணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கடற்றொழில் இணையத்தின் செயலாளர் அன்னலிங்கம் அன்னராசா இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் பருத்தித்துறைப் பகுதியில் 4 மீனவர்கள் கடலுக்குச் சென்று காணாமல் போனமை, தீவகம் பகுதியிடைப்பட்ட பகுதியில் மீனவர்கள் கடலுக்குச் சென்று காணாமல் போனவை போன்ற சம்பவங்கள் குறித்து ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் எதிர்கட்சி பாராளுமன்ற உறுப் பினர்கள் எவரும் அக்கறை செலுத்தவில்லை.

குறித்த விடயம் தொடர்பில் மீனவர்கள் சார்பில் எவரும் குரல் கொடுக்கவில்லை. அத்துடன் கடற்றொழில் அமைச்சர் தான் ஆதரவாக இருப்பேன், அவர்களின் பிரச்னைகளை பார்ப்பேன் என்று கூறுகிறார். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மீனவர்கள் காணாமல்போன பின்னர் அவர்களுக்கான நடவடிக்கைகள் தாமதமாக மேற்கொள்ளப்பட்டன.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளும் தடை செய்யப்பட்ட கடற்றொழிலை நிறுத்துவதற்கு முன் வருவதில்லை. அதற்கான சட்டங்களை பிரயோகிப்பதில்லை. திணைக்கள அதிகாரிகளும் அரசாங்கத்துடன் இணைந்து சிறு தொழிலாளர்களை மிரட்டுகின்ற செயற்பாடுகளை அண்மைக் காலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

கடற்றொழில் சமூகத்தின் பாதிப்பைக் கவனத்தில் கொள்ளவேண்டும். வடக்கில் தமிழ்க் கடலை அழிப்பதனை நிறுத்துமாறு தமிழ் அரசியல் தலைவர்களைக் கேட்டு வருகின்றோம். ஆனால் அவர்களே எமது கடல் வளத்தை அழித்து வருகின்றனர்.

தேசியம் என்ற போர்வையில் சில தமிழ் சட்டத்தரணிகள் எமது கடலை தாரை வார்த்து கொடுப்பதற்கு பல வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அவற்றை எம்மால் ஆதரிக்க முடியாது.

மீனவ சமூகம் சார்ந்த பொறிமுறை ஒன்றை உருவாக்கிக் கடலில் நடக்கும் சம்பவங்களை உடனடியாக அறிந்து அதற்கான நடவடிக்கை எடுப்பதற்கான பரிந்துரை ஒன்றை உருவாக்க வேண்டும்.

இனிமேல் எந்த ஒரு உயிரும் கடலில் காணாமல் போகக்கூடாது. உயிர் போகக்கூடாது. அதற்கேற்ற தொழில்நுட்ப வசதிகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொண்டு அதற்கான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# செம்மணி மனித புதைகுழியில் நேற்றும் 6 என்புக் கூட்டு தொகுதிகள் அடையாளம்!

யாழ்ப்பாணம், ஜுன். 08

செம்மணி மனித புதைகுழியில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை இரண்டு சிறுவர்களின் என்புக் கூட்டுத் தொகுதி உள்ளடங்கலாக 08 என்புக் கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 18ஆம் நாள் அகழ்வுப் பணி நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது 6 என்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்புக் கூட்டுத் தொகுதிகளில் சிறுவர்களின் இரண்டு என்புக் கூட்டுத் தொகுதி உட்பட 08 என்புக் கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் செம்மணி மனிதப் புதைகுழியில் இது வரை நடைபெற்ற அகழ்வுப் பணிகளின்போது, 302 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் 298 என்புக் கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.



# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜுன். 08

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவுப் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தில் டெங்கு நோயாளர்கள் அறிக்கைப்படுத்தப்படுவது 50 வீதம் முதல் 55 வீதம் வரையான வீதத்தால் அதிகரித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதேபோல், இந்த வருடத்தில் கடந்த ஜுன் 5ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 36 ஆயிரத்து 168 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும், அவர்களில் 50 வீதமான நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

மேல் மாகாணத்திற்கு மேலதிகமாக, தெற்கு மாகாணத்தின் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும், சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களிலும், புத்தளம் மாவட்டத்திலும் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்திலும் அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக வைத்தியர் கபில கன்னங்கர தெரிவித்தார்.

டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பதற்கு ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் நிலவிய மழையுடனான வானிலையும் ஒரு காரணமாக அமைந்துள்ளது எனச் சுட்டிக்காட்டிய வைத்தியர், "டித்வா" புயலின் பின்னர் பெருமளவில் குப்பைகள் சேர்ந்ததன் காரணமாக கொசுக்கள் பெருகும் இடங்கள் உருவாகியுள்ளதாகவும் தெரிவித்தார். (அ)

# சுரேஷ் சாலே நடத்தப்படும் விதம் நாமல் ராஜபக்ஷ எம்.பி. கவலை

கொழும்பு, ஜுன். 08

முன்னாள் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் சுரேஷ் சாலேயுக்கு தடுப்புக் காவலில் இழைக்கப்படும் நடத்துகை குறித்து அவரது சட்டத்தரணிகளால் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் ஆழ்ந்த கவலையளிப்பதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராகத் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்த செயற்பாட்டாளர்கள் இந்த விடயத்தில் மௌனம் காப்பது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாகத் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சுரேஷ் சாலே நீதவானின் விளக்கமறியல் உத்தரவின் கீழ் வைக்கப்படாமல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சட்டத்திற்கு எதிராகப் பல வருடங்களாகப் பிரசாரங்களை முன்னெடுத்த பல சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் தற்போதைய திடீர் மௌனம், அவர்களின் நடுநிலைமைத் தன்மை குறித்து கடுமையான கேள்விகளை எழுப்புகிறது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும் என்பதில் நாம் அனைவரும் உடன்படுகிறோம்.

ஆனால், அந்த நீதி எந்தவொரு பக்கச்சார்பும், அரசியல் செல்வாக்கும் இன்றி வழங்கப்பட வேண்டும். விசாரணைகள் உண்மையை அடிப்படையாகக் கொள்ளாமல், அரசியலால் தூண்டப்பட்டால், அது உண்மையான நீதியை எதிர்பார்க்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் இழைக்கப்படும் துரோகமாகவே முடியும்.

ஆனால், அரசியல் நோக்கங்களைக் கொண்ட விசாரணைகள் மூலம் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒருபோதும் உண்மையான நீதியைப் பெற்றுத்தர முடியாது-என தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு நிறுவனத்தினரால் 08.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org